DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.40/2016

PROSECUTION WITNESS L.W.6/P.W.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நிரஞ்சன் | தகப்பனார் பெயர் | கணேசன் |
| கிராமம் | கொல்லம்பாளையம் | ஊர் | |
| தொழில் | டிரைவர் | வயது | |

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு – 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 21.01.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு கொல்லம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். டிரைவர் வேலை செய்து வருகிறேன்.

2) 2015 ம் வருடம் தேதி ஞாபகமில்லை, மதியம் 2.00 – 2.30 மணியளவில் கார்மெல் பள்ளி அருகில் உள்ள சரஸ்வதி டீக்கடையில் நானும், எனது மாமா முருகனும் டீ குடித்துக் கொண்டிருந்தோம். அப்போது எனது நண்பர் மணி (எ) மணிகண்டன் அங்கு வந்தார். அப்போது எனது தங்கையின் மாமனார் முனுசாமி கார்மெல் பள்ளி வாசலிலிருந்து ரோட்டை கடந்து சென்று கொண்டிருந்தபோது, கரூர் – ஈரோடு செல்லும் சாலையில் வேகமாக லாரி வந்து கொண்டிருந்தது. அதை பார்த்த நான் மாமா, மாமா என கத்தினேன், முனுசாமி திரும்புவதற்குள் வேகமாக வந்த லாரி மோதி முனுசாமியை சிறிது தூரம் இழுத்துச் சென்றது. அதில் முனுசாமியின் தலை முழுதும் நசுங்கி விட்டது. நானும், முருகனும் சென்று பார்த்தோம். முனுசாமியை வெளியே எடுத்தோம். 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொன்னோம். அவர்கள் வர தாமதமானதால் தனியார் ஆம்புலன்சு மூலமாக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பின்னர் முனுசாமி இறந்துவிட்டதாக தகவல் கேள்வி பட்டேன். பின்னர் தாலுக்கா காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இறந்து போன முனுசாமி எனது தங்கையின் மாமனார் ஆவார். நான் சொல்ல சொல்ல புகாரை போலீசார் எழுதிக் கொண்டார்கள். சம்பவம் நடந்த அன்று நான் காவல்நிலையம் சென்றபோது தான் போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் விசாரணையில் எனது மாமா மேற்கிலிருந்து கிழக்கு

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.01.21 18:13:20 +0530

நோக்கி ரோட்டின் இடது புறமாக நடந்து சென்றபோது, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த லாரி மோதி இறந்துவிட்டதாகத் தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வண்டி சிமெண்ட் லாரி ஆகும். சம்பவ சமயத்தில் லாரியில் சிமெண்ட் லோடு இருந்ததா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. கார்மெல் பள்ளிக்கு முன்பு ரோட்டில் இடதுபுறத்திலும், வலதுபுறத்திலும் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். ஈரோட்டிலிருந்து கரூர் செல்லும் வாகனங்களும், கரூரிலிருந்து ஈரோடு வரும் வாகனங்களும் தனித்தனியாக செல்லக்கூடிய வகையில் ரோட்டின் நடுவில் டிவைடர் உள்ளது என்றால் ஆமாம். விபத்து நடந்ததாக சொல்லக்கூடிய வாகனம் 24 சக்கரங்கள் கொண்ட கனரக வாகனம் என்பதாலும் சம்பவ இடத்தில் வேகத்தடை இருந்த காரணத்தினாலும் வாகனம் முழுமையாக சரக்கு ஏற்றப்பட்டிருந்த காரணத்தினாலும் வேகமாக செல்வதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இறந்து போனவர் எனது உறவினர் என்ற காரணத்தினாலும், நஷ்ட ஈடு கிடைக்க வேண்டும் என்ற காரணத்தினாலும், நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல்துறை விசாரணையில் நான் சொன்னதுபோல் சம்பவம் நடைபெற்றதற்கு சாத்தியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.01.21 18:13:31 +0530

Judicial Magistrate No.I,
Erode.